DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai
**CC. No. 345/2025**

**eposition of LW1 examined as PW1** Dt. 10.03.2026

| | |
|---|---|
| Name | அறிவழகன் |
| Father's Name | சாமிதுரை |
| Village | நல்லாவூர் |
| Taluk | |
| Age | 47/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 10.03.2026

(A1, A2 present)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில் இல்லை. கடந்த வருடம் ஒரு நாள் இரவு நான் வீட்டில் இருந்த போது யாரோ சிலர் என் வீட்டிற்கு வந்து என்னிடம் தகராறு செய்து திட்டி, தாக்கினார்கள். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது போலீசாரிடம் ஆஜர் எதிரிகளுக்கும் எனக்கும் ஏற்கனவே இருந்த முன்விரோதம் காரணமாக ஆஜர் எதிரிகள்தான் மேற்படி குற்ற செயலை செய்திருப்பார்கள் என்று மிகைப்படுத்தி புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டேன். இரவு நேரம் என்பதால் என்னை திட்டி தாக்கியவர்கள் யார் என்று எனக்கு தெரியவில்லை சம்பவ இடத்தில் எதிரிகளை நான் பார்க்கவில்லை. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னிட்டு போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

**அரசுதரப்பு குறுக்குவிசாரணை**

ஆஜர் எதிரிகள் எனது பக்கத்துவீட்டை சேர்ந்தவர்கள் ஆவார். ஆஜர் எதிரிகளோடு தற்போது சமதானம் ஆகி சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். கடந்த 08.09.2025 ம் தேதி இரவு 10.00 மணியளவில் நான் வீட்டில் இருந்த போது ஆஜர் எதிரிகள் என் வீட்டிற்கு வந்து என்னை தகாத வார்த்தைகளில் திட்டியும், எதிரி ராஜா கையில்

மறைத்து வைத்திருந்த அறிவாளால் எனது தலை மற்றும் கையில் வெட்டி ரத்த காயத்தை ஏற்படுத்தியதாகவும் தடுக்க வந்த எனது மகன் வினித்தையும் அறிவாளால் வெட்டி ரத்த காயத்தை ஏற்படுத்தியதாகவும், எங்களை கொன்று விடுவதாக கொலை மிரட்டல் விடுத்ததாகவும், புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டபடியால் அவர்களை வழக்கில் இருந்து விடுவிக்க வேண்டும் என்பதற்காக போலீசார் விசாரணைக்கு மாறுபட்ட சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

அறிவழகன்